IJCRT.ORG ISSN : 2320-2882

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)

An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# கொரோனாவின் ருத்ர தாண்டவம்

**"வசந்தம் வராத வருடம் (மனுஷ்ய புத்திரன்)"**

**ப.கண்ணன்**
**முனைவர் பட்ட ஆய்வாளர் (தமிழ்த்துறை)**
**கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி(தன்னாட்சி)**
**கவுண்டர்மில் பிரிவு**
**கோவை-641029**

**பாரதியார் பல்கலைக்கழகம் கோவை**

**நெறியாளர்**
**முனைவர் மு.ருக்மணி**
**முதுநிலைப் பேராசிரியர்(தமிழ்த்துறை)**
**கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி(தன்னாட்சி)**
**கவுண்டர்மில் பிரிவு**
**கோவை-641029**

**ஆய்வுச்சுருக்கம்:**

அமைதியான நதியில் ஆர்ப்பரித்து அலைகள் வந்து கரையை மோதுவது போல அமைதியான இப்புவியில் கொரோனா எனும் கொடிய நோய் தோன்றி இப்புவியை ஆட்டிப்படைத்தது என்றால் அது மிகையில்லை. கொத்துக் கொத்தாக உயிர்களை கொத்திப்போனது, கொடிய மிருகம் போல மனிதர்களைத் தாக்கி ருத்ர தாண்டவமே ஆடியது. அதிலிருந்து மீள்வதென்பது எளிதானதல்ல எத்தனை எத்தனை கட்டுப்பாடுகள், தனிமைப்படுத்தல், சோதனைகள் சொல்லணா துயரங்கள் என்பதை நாம் இனி இதுபோல் இதுவரை கண்டதில்லை, இதைக் கவிதை வடிவில் வசந்தம் வராத வருடம் எனும் தலைப்பில் "மனுஷ்ய புத்திரன்" எழுதிய நூல்தான் இங்கு ஆய்வாக மலர்கிறது.

**திறவுச்சொற்கள்:**

கொரோனாவின் ருத்ர தாண்டவம் "வசந்தம் வராத வருடம் (மனுஷ்ய புத்திரன்)"

**முன்னுரை:**

**நோய்நாடி நோய் முதல்நாடி அதுதணிக்கும்**
**வாய்நாடி வாய்ப்பச் செயல் (குறள் - 948)**
என்பது குறள்.

நோயை அறிந்து அது உண்டான காரணத்தை அறிந்து அது தீர்க்கும் வழியையும் அறிந்து நோயை குணப்படுத்த வேண்டும் என்பதை வள்ளுவரின் கருத்தாகும். கொரோனா முதன் முதலில் சீனாவில் ஆய்வுக்கூடத்தில் இருந்து வெளியேறிய வைரஸ், கொரோனா வடிவம் பெற்று உலகையே அச்சுறுத்தியது.. கொரோனாவை விரட்ட வல்லரசு நாடுகளே வழி தெரியாமல் திகைத்தது அந்த அளவுக்கு கொரோனாவின் தாக்கம் இருந்தது, மாத்திரையையும் சமூக இடைவெளியும் ஓரளவுக்கு தடுத்தன. நமது இந்திய அரசு எடுத்த சீரிய முயற்சியில் கோவிட்-19 எனும் தடுப்பூசியை கண்டறிந்து நோயைத் தடுத்தது. அதாவது கட்டுக்குள் கொண்டு வந்து என்பதை நாம் அறிவோம் அதைப் பற்றியது இவ்வாய்வாகும்.

**ஆய்வு அணுகுமுறை:**

உலகையே அச்சுறுத்திய கொரோனா மனித குலத்தை எவ்வாறு வாட்டி

வதைத்தது அது உருவான விதம் மனித குலத்தை எப்படி அச்சுறுத்தி பின் தொடர்ந்தது அது ருத்ர தாண்டவமாடிய விதம் மனித குலத்தையே பயமுறுத்தி உலகையே மயான பூமியாக்கி மகிழ்ந்த விதம், கொரோனா கடந்து சென்ற விதம், அதை நாம் எதிர்க்கொண்ட விதம் என்பதைப் பற்றி நாம் இவ்வாய்வில் காண விருக்கிறோம்.

**உட்தலைப்பு:**

1. வைரஸின் மறு வடிவம்
2. நிழல் போல் தொடர்ந்த அச்சம்
3. கொரோனாவின் சுவிடுகளும் மாறாத வடுக்களும்
4. வாழும் வகையறிந்து வாழ்

**கொரோனாவின் ருத்ர தாண்டவம்**

**1. வைரஸின் மறு வடிவம்**

கவிதை:1

பக்கம் : 23 **பிணிசூழ் உலகு**

**நான் வீட்டில் இருக்கிறேன்**
**நான் சிகிச்சையில் இருக்கிறேன்**
**நான் ஓய்வில் இருக்கிறேன்**
----------------------------------------------
----------------------------------------------
**இதயமற்ற காலத்தில்**
**கோழைத்தனத்தின் கிசுகிசுப்புகள் தானே**
**எங்கும் கேட்கிறது**
**கையாலாகாத ஒரு காலத்தின் மேல்**
**பெரும் பிணியொன்று சூழ்கிறது**

நான் வீட்டில் இருக்கிறேன், சிகிச்சையில் இருக்கிறேன், ஓய்வில் இருக்கிறேன். பூமியின் பாதியிருள் என் நெஞ்சில் விழுகிறது. வெளியே செல்லாதே கிருமி தொற்று என்கிறார்கள், பனியில் நில்லாதே என்கிறார்கள், சத்தமாக பேசாதே என்கிறார்கள், இதயத்திற்க்கு நல்லதல்ல என்கிறார்கள், கையாலாகாத காலத்தின் மேல் பெரும் பிணியொன்று சூழ்கிறது என்கிறார் கவிஞர்.

நோய் தொற்று அதிகமாக உள்ளது வெளியே எங்கும் செல்ல வேண்டாம், சத்தமாக பேச வேண்டாம் எனக் கூறும் கவிஞர் இவ்வுலகை பெரும் பிணி சூழ்கிறது என்கிறார். ஏற்கனவே இப்புவியை ஐம்பூதங்கள் சூழ்ந்துள்ளது.மேலும் நிலத்தை மூன்று பங்கு நீர் சூழ்ந்துள்ளது.ஆனால் இப்போது பிணி சூழ்ந்துள்ளது என்கிறார்.

ஐம்பூதங்களால் இப்புவிக்கோ உயிர்களுக்கோ எவ்வித தீமையும் இல்லை. அதேபோல் நீராலும் எந்தவித தீங்குமில்லை .ஆனால் பிணி சூழ்ந்துள்ளதால் அதுதான் உயிரினத்திற்கு இழைக்க முடியாத தீங்கு என எண்ணியே பிணி சூழ்கிறது என்கிறார்.

**2. நிழல் போல் தொடர்ந்த அச்சம்**

கவிதை : 8

பக்கம் – 34 **பேரழிவின் நடனம்**

**சுற்றுலாப் பயணிகள் இல்லாமல்**
**வெறிக்கோடிய தாய்லாந்து தெருக்களில்**
**உணவளிக்க யாருமற்று ஆயிரம் குரங்குகள்**
**பசியோடு அலையும் காட்சியைக் கண்டேன்**
----------------------------------------------------------------
----------------------------------------------------------------
-
**கொள்ளை நோயின் கடவுள்**
**இத்தனை இதயமற்றவராக இருக்க வேண்டுமா?**

சுற்றுலாப் பயணிகள் யாரும் இல்லாமல் தாய்லாந்து நகரில் ஆயிரம் குரங்குகள் பசியோடு இருப்பதைப் பார்த்தாராம் அங்கு வாழும் மக்கள் பதப்படுத்தப்பட்ட உணவுகளோடு வீட்டுக்குள் பதுங்கி இருக்கிறார்களாம். சாலைகளில் குரங்குகள் மட்டுமே இருக்கிறதாம் வேறு எவரும் இல்லையாம். அந்தக் காட்சி உலகின் கடைசி தினம் போல் அஞ்சப்படுகிறதாம் குரங்குகள் இதை அறியாமல் ஒன்றையொன்று கடித்துக் கொள்கிறதாம். கொள்ளை நோயின் கடவுள் இத்தனை இதயமற்றவராக இருக்க வேண்டுமா என்கிறார்.

கொள்ளை நோயின் வீரியமான தாக்குதல் அதிகமாக இருப்பதால் தாய்லாந்து நகரம் வெறிச் சோடியதாம் ஆள் அரவமற்ற தெருக்களில்

குரங்குகளைத் தவிர வேறு யாரும் இல்லையாம். அந்தக் குரங்குகள் எவரும் வந்து உணவளிக்காதால் பசியோடு இருக்கிறதாம். அந்தக் காட்சியைக் காணும் போது உலகின் ஊழித் தினம் போல காட்சியளிக்கிறதாம், இதையறியாத குரங்குகள் ஒன்றையொன்று கடித்துக் கொள்கிறதாம். ஆம் உணவில்லையெனில் மனிதன் கூட கடற்கரை மண்ணை உண்ணச் சென்றான் என்பதை நாம் ஒரு திரைப்படத்தில் பார்த்தோம் பாவம் அந்த ஐந்தறிவு விலங்கு என்ன செய்யும் என்னும் அளவுக்கு கடவுள் இத்தனை இதயமற்றவரா என தன் கேள்விக் கணையைத் கொடுக்கிறார் கவிஞர்.

**3. கொரோனாவின் சுவிடுகளும் மாறாத வடுக்களும்**

கவிதை : 18

பக்கம் : 47 **வைரஸின் இறைதூதன்**

**உலகில் எங்கோ**
**ஒரு மனிதனின் உடலில்**
**ஒரு சாதாரண வைரஸ்**
**ஒரு ஆட்கொல்லி வைரஸசாக**
**மரபணு மாற்றமடைகிறது**
**பிறகு அந்த மனிதனிடமிருந்து**
**லட்சக்கணக்கானோர்**
**கொல்லப்படும்**
**கொள்ளை நோயின் பயணம்**
**துவங்குகிறது**

--------------------------------------------------------------------
--------------------------------------------------------------------

**வரலாறு இனி அரசர்களால் அல்ல**
**கொள்ளை நோயைக் கொண்டு வருபவர்களால்**
**எழுதப்படுகிறது.**

உலகத்தில் எங்கோ ஒரு மனிதனின் உடலில் தோன்றிய சாதாரண வைரஸ் ஆட்கொல்லி நோயாக மரபணு மாற்றமடைகிறது. பிறகு அந்த மனிதனிடமிருந்து லட்சக்கணக்கானோர் கொல்லப்படும். இவ்வாறு நோயின் பயணம் துவங்குகிறது. ஒரு மனிதன் ஒரு கண்டத்திலிருந்து இன்னொரு கண்டத்திற்கு நுழைகிறான். அப்போது நோயின் வைரஸைக் கொண்டு வருகிறான். பிறகு அவனிலிருந்து லட்சக்கணக்கானோர் இறக்கிறார்கள். இவ்வாறே வரலாறு எழுதப்படுகிறது. ஒரு மனிதன் கடவுளின் தூதனாகிறான், ஒரு மனிதன் புரட்சியாளனாகிறான், ஒரு மனிதன் சர்வாதிகாரனாகிறான் ஒரே ஒரு மனிதன் தான் தீராத நோயைக் குணப்படுத்தும் மருந்தைக் கண்டுபிடிக்கிறான் வரலாறு இனி அரசர்களால் அல்ல நோயைக் கொண்டு வருபவர்களால் எழுதப்படும் என்கிறார்.

இந்திய வரலாற்றில் அன்னியன் முதலில் வாணிபம் செய்ய மேற்கு கடல் வழியாக இந்தியாவிற்குள் நுழைந்தான். பிறகு சிறிய மகாணங்களைக் கைப்பற்றினான். பிறகு ஒட்டுமொத்த மகாணங்களை கைப்பற்றி இருநூறு ஆண்டுகளுக்கு மேல் இந்தியாவை அடிமைப்படுத்தினான். மகாத்மாகாந்தி நேரு போன்ற சுதந்திரம் போராட்ட தியாகிகளால் நமக்கு விடுதலை கிடைத்தது. ஆனால் அன்னிய தேசத்தில் இருந்து வந்த கொரோனாவால் நமக்கு எப்போது விடிவு கிடைக்கும் என்ற ஏக்கத்தோடு வரலாறு இனி நோயைக் கொண்டு வந்தவர்களால் எழுதப்படும் என்கிறார்.

**4. வாழும் வகையறிந்து வாழ்**

கவிதை:22

பக்கம் 52 **கொரோனாவிற்கு மருந்து அரசரின் சொற்கள்**

**கொள்ளை நோய்க்கு**
**ஒருவழியாய் மருந்து**
**கண்டுபிடிக்கப்பட்டுவிட்டது**
**அரசரின் புத்தகங்கள் தான்**
**அந்த மருந்து.**

--------------------------------------------------------
--------------------------------------------------------

**ஏற்கனவே நமக்கு சொல்லப்பட்டது தான்**
**முள்ளை முள்ளால் எடுக்க வேண்டும்**
**தீமையைத் தீமையாய் வெல்ல வேண்டும்**
**நோய்யை நோய்மையால் அழிக்க, வேண்டும்**

கொள்ளை நோய்க்கு ஒரு வழியாக மருந்து கண்டுபிடிக்கப்பட்டுவிட்டது. அரசரின் புத்தகம் தான் அந்த மருந்து முன்பு கசப்பு மருந்தை அருந்த

வேண்டும் எனச் சொன்னவர் இப்போது திராவகம் போல எரியும் மருந்தொன்றைக் தருகிறார். அரசர் பெரும் துயரங்களை உருவாக்குவதில் வல்லவர் என்பது போலவே பெரும் துயர் காலங்களில் நம்பிக்கையூட்டும் சொற்களைத் தருவதிலும் வல்லவர். நீங்கள் கொரோனா படுக்கையில் இருக்கும் போது அரசரின் புத்தகங்களைப் படிப்பது உங்கள் ஆன்மிகம் வலிமையை வலிமைப்படுத்தும் என்றும் முள்ளை முள்ளால் எடுப்பது போல, தீமையை அதாவது நோய்மையை நோயால் அழிக்க வேண்டும் என்கிறார்.

அரசர் தரும் புத்தகங்கள் தான் நோயை விரட்டும் நீங்கள் கொரோனா வார்டில் இருக்கும் போது அரசர் தரும் புத்தகளைப் படியுங்கள் என்றால் புத்தகத்தைப் படிக்கும்போது நமது கவனம் புத்தகத்திலேயே இருக்கும். அப்போது நம்மை அறியாமலே நம்மை நாம் தனிமைப்படுத்திக் கொள்வோம். கொரோனா காலத்தில தன்னைத் தானே தனிமைப்படுத்துதல் எல்லோராலும் கடைபிடிக்கப்பட்டதுதான், அதற்காகத்தான் அரசர் புத்தகம்படி என்றார் எனலாம்.

**முடிவுரை:**

இவ்வாறாக கொரோனா மனித உடலில் சிறிய வைரஸாக தோன்றி கொரோனாவென உருவெடுத்து உலகத்தையே உலுக்கியது என்பதை நாம் மறக்க முடியாது. அந்த நாளில் எவ்வாறு நம்மை காத்திட தற்காப்பு வழிமுறைகளை கையாண்டோம் என்பதை எண்ணி தொடர்ந்து தற்காப்பு வழியைப் பின்பற்றி கடைபிடித்து வருமுன் காப்போம். வாழும் வகையை தலைமுறைக்கு எடுத்துச்சொல்ல நல்லவழி காட்டியாக இருப்போம்,